[1981 பிப்ரவரி 27

திருநெல்வேலி மாவட்டத்தில் பேத்துவார முறை.

*வினா எண். 283—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில், ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா உட்பட சில பகுதிகளில் பேத்துவார முறை அமுலில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் இந்த வாரதார்களுக்கு சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) ஆம்.

(ஆ) இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவரவர்களே, இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த அளவிற்கு வரவேற் கிறோம். ஆனால், இந்தச் சாகுபடியாளர்களைப் பொறுத்த மட்டில் அவர்களுக்குத் தொடர்ந்து சாகுபடிக்குக் கொடுக்காமல் அவர்களை வெளியேற்ற முயற்சி நடக்கிறது. அது அரசாங் கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர் களை வெளியேற்றுவதற்குச் சாதகமாக போலீஸ் ஒருதலைப் பட்சமாக இருந்து, ஏற்கனவே சாகுபடி செய்த விவசாயிகள் மீண்டும் வயலில் இறங்கும்பொழுது நூற்றுக்கணக்கான ஆண் களும், பெண்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அரசு உடனடியாகத் தலையிட்டு அந்த விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுத்து அவர்களுக்கு நிலங்களைக் கொடுக்க உதவி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கிருக்கின்ற சட்டத்தில் அவர் களுக்குப் பாதுகாப்பு இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவரவர்களே, பாதுகாப்பு இல்லை என்று அமைச்சரவர்கள் ஒரு வரியில் சொல்லி விட்டார்கள். உடனடியாக அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்தால்தானே அங்கே ஆண்களும், பெண்களும் கைது செய்யப்படுவதைத் தடுக்க முடியும். ஏற்கனவே அந்தச் சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம் வந்து பல ஆண்டுகளாகி விட்டன; இதைக் கொண்டுவர வேண்டுமென்பதற்காகப் பல தடவைகள் முயற்சித்தும்கூட இப்படிக் காலதாமதம் ஏற்படு கிறது. நிலச்சுவான்தார்கள் விவசாயிகளை வெளியேற்று கிறார்கள். அதைத் தடுக்க அவசரச் சட்டம், பில் ஏதாவது கொண்டு வர அரசு முன்வருமா?

1981 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கிருக்கின்ற சாகுபடியாளர் சட்டம் அவர்களுக்கு செல்லாது. காரணம் இன்றைக்கு நாம் பாதுகாப்பு என்று சொன்னாலும்கூட அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய் தங்களுக்குச் சாதகமாக செய்து கொண்டு விடுகிறார்கள். அதற்காக அரசு சீக்கிரமாக தனிச்சட்டம் கொண்டுவர யோசித்துக்கொண்டிருக்கிறது. யோசிப்பது மட்டுமல்ல, விரைவிலே கொண்டு வரும்.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலில் சட்டம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அதற்கு முன் தஞ்சைக்கு இருக்கின்ற சட்டத்தை அரசு விஸ்தரிப்பதிலே எந்தவிதமான கஷ்டம் கிடையாது. திருநெல்வேலியிலே, சாகுபடியாளர்கள் சட்டம் இருக்கிறது ; ஆகவே, இதைக் கொண்டுவருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சையிலே இருக்கின்ற சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம் நிலத்தை அவர்கள் சாகுபடி செய்கிறார்கள் ; சாகுபடி செய்பவர்களை வெளியே அனுப்ப முடியாது. ஆனால் இதிலே பாதுகாப்புச் சட்டம் என்றால், அவர்கள் சாகுபடி செய்யவும் இல்லை ; கூலி ஆட்களாகவும் இல்லை ; மாதச் சம்பளம் பெறவும் இல்லை. இப்படி இதிலே பல மாறுபட்ட நிலைமைகளெல்லாம் இருக்கின்றன.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேத்துவார முறை என்பது ஒவ்வொரு ஆண்டும் அல்லது ஒவ்வொரு மகசூலிலும் வார சாகுபடியாளர்களைச் மாற்றி, அதிகப்படியான குத்தகை கொடுக்கிற முறை பேத்துவார முறை என்று திருநெல்வேலி மாவட்டத்தில் வழங்கப்படுகிறது. இந்த முறையை மாற்றியமைக்க அரசாங்கம் சாகுபடியாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தை விஸ்தரிப்பதாக, அமைச்சரவர்கள் திட்டமிருப்பதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு RTRஎன்று சொல்லக் கூடிய குத்தகைப் பதிவேட்டிலே அனுகூலம் கிடைக்கும் அளவிற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, நான் தெளிவாகச் சொன்னேன். பேத்து வாரம் என்றால், வாரம் செய்பவர்கள் நிலத்தை உழுவது, தண்ணீர் பாய்ச்சுவது என்பதும், அதற்குப் பிறகு அவர்கள் செய்த காரியத்திற்காக தண்ணீர் பாய்ச்சுவது, உழுவது மட்டும் தான் அறுவடையில் ஒரு கோட்டை நெல் பெற

வேண்டுமென்றுதான் இருக்கிறது. தண்ணீர் பாய்ச்சுவது உழுவது மட்டும்தான். ஆனால் நடவு நடுவது களை எடுப்பது போன்றவற்றிற்காக, பாதிக் கூலியை அவர்களும், பாதியை நிலச் சொந்தக்காரர்களும் கொடுக்கிறார்கள். ஆகவே, இந்த நிலையில் நாம் நடவடிக்கை எடுத்தால், நீதிமன்றம் அவர்களுக்குச் சாதகமாக இருக்கிறது. ஆகவேதான் விரைவிலே இதற்குச் சட்டம் கொண்டு வர அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது இந்தப் பேத்துவாரதாரர்கள் என்று சொல்லப்படுபவர்கள் குத்தகைதாரர்கள் மாதிரி சாகுபடி செய்யவில்லையென்று சொன்னார்கள். அதேமாதிரி திருச்சியிலே, கையேருவாரம்தார், மாட்டுவாரம்தார் என்று இருக்கிறார்கள். அவர்களுக்கு குத்தகை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு கிடைக்கிறது. அதேமாதிரி பேத்துவாரம் என்று சொன்னால், நிலத்தை நிலச்சுவாந்தாரர்கள் கொடுப்பார்கள். உரம் சாகுபடிதாரர்கள்தான் போடுவார்கள். அவர்கள் பாடு பட்டு சாகுபடி செய்யக் கூடியவர்கள். அவர்கள் அவர்களது பாட்டன் காலத்திலிருந்து, தந்தை காலத்திலிருந்து பாடுபடுகிறார்கள். இப்பொழுது உழுபவனுக்கு நிலம் சொந்தமாகும் என்ற நிலையிலே, அவர்களை வெளியேற்றும் நிலை ஏற்பட்டிருக்கிறது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே சொற்பொழிவு ஆற்றக் கூடாது. சுருக்கமாகக் கேள்வியை மட்டும் கேட்க வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : ஆகவே, திருச்சியிலே உள்ள கையேருவாரம்தார், மாட்டுவாரம்தார் மாதிரி, இவர்களுக்கும் சாகுபடி சட்டத்திலே பாதுகாப்பு அளித்தால், உடனடி பலன் கிடைக்கும். அதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை ஒரு வகையிலே நான் ஏற்றுக்கொள்கிறேன். அதுவும், இதுவும், similar. But not identical. There is some difference between 'similar' and 'identical'. It is similar to that but not identical. வித்தியாசம் இருக்கிறது. அதையெல்லாம் பார்த்து பேத்துவாரதாரர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு அளிக்க அரசு, முயற்சி செய்யும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

1981 பிப்ரவரி 27]

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பேத்துவார சாகுபடியின் கீழ் உள்ள மொத்த நிலப்பரப்பு எவ்வளவு ? எவ்வளவு பேர்கள் அதில் ஈடுபட்டுள்ளனர் என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, மொத்தம் 3748.33 ஏக்கர். அதிலே, வேலை செய்கிறவர்கள் 1,917 பேர்கள். இருக்கிற நிலச் சொந்தக்காரர்கள் 2,400 பேர்கள்.

கல்லூரியில் நடைபெறும் ராகிங்.

*வினா எண். 284—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரிகளில் நடைபெறும் ' ராகிங்கை ' சட்டபூர்வமாக தடை செய்யும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கல்லூரிகளில் நடைபெறும் ' ராகிங்கை ' (Ragging) சட்டபூர்வமாக தடை செய்யும் உத்தேசம் அரசுக்கு இல்லை. எனினும் கல்லூரி மாணவர்கள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுதல் கூடாது என்று கல்லூரி கல்வி இயக்குநரால் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் ' ராகிங் ' என்பது வேடிக்கையாக இல்லாமல், அது ஒரு சித்திரவதையாக நடந்து கொண்டிருக்கிறது. இந்த ராகிங்கினால், எந்த எந்தக் கல்லூரிகளில் யார், யார் இறந்திருக்கிறார்கள். மாணவர்களுக்குப் பாதுகாப்பு தருவதன் மூலம் அப்படி இறக்காதவண்ணமும், சித்திரவதைகள் நடைபெறாத வண்ணமும், அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசம் உள்ளதா ? ராகிங்—சித்திரவதை—செய்த மாணவர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ராகிங் என்பது கேலி செய்வது என்கிற அடிப்படையிலேதான் சட்டபூர்வமாக தடை செய்யும் உத்தேசம் அரசுக்கு இல்லையென்று சொன்னேன். ஆனால், சித்திரவதை செய்வது, அத்துமீறி நடப்பது தவறானது. அப்படிப்பட்ட மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாம் கல்லூரி முதல்வர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறோம்.